Tamil

# குழந்தைகள் பறப்பதில்லை! ஜன்னலில் இருந்து குழந்தைகள் தவறி விழுவதற்கு நாமே காரணம்!

**ஜன்னல்கள் மற்றும் மாடி முகப்புகளிலிருந்து குழந்தைகள் விழுவதைத் தவிருங்கள்!**

## ஜன்னல் மற்றும் மாடி முகப்புகளில் குழந்தைகள் பாதுகாப்பாக இருப்பதற்காக உறுதிப்படுத்த வேண்டிய விடயங்கள்

**ஜன்னல்கள் மற்றும் கைப்பிடி சுவர் கம்பிகளுக்கு இடையே அதிகபட்சமாக 12.5 சென்டி மீட்டர் இடைவெளிதான் இருக்க வேண்டும் என்பது 'அவுஸ்திரேலிய கட்டிடக் கோட்பாட்டு விதி'யாகும். தற்போதைய கட்டிட கோட்பாட்டுத் தரங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதிமுறை பழைய கட்டிடங்களில் உள்ள ஜன்னல்கள் மற்றும் கைப்பிடி சுவர்களுக்கு இல்லை என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.**





| ஆம் | இல்லை | ஜன்னல் பாதுகாப்பு |
|---|---|---|
| ☐ | ☐ | 12.5 சென்டி மீட்டர் இடைவெளிக்கு மேல் திறப்பதைத் தடுப்பதற்கென தரை மட்டத்திற்கு மேல் உள்ள மாடிகளில் உள்ள ஜன்னல்களில் பாதுகாப்புத் தடுப்புகள்/தாழ்கள்/பூட்டுகள் பொருத்தப்பட்டுள்ளனவா? |
| ☐ | ☐ | முடியும் என்றால், ஜன்னல்களை மேல் பக்கத்திலிருந்து திறக்க இயலுமா? |
| ☐ | ☐ | பிள்ளைகள் ஜன்னல் வழியாக விழுவதைத் தடுக்கும் அளவிற்கு ஈக்களைத் தடுப்பதற்காக ஜன்னல்களில் போடப்படும் வலைத் தடுப்புகளுக்கு வலுவில்லை என்பது தெரியுமா? |
| ☐ | ☐ | குழந்தைகள் ஜன்னல்களில் ஏறுவதைத் தடுக்கும் வழியில் கட்டில்கள் மற்றும் இதர மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் ஜன்னல்களிலிருந்து தூரமாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளனவா? |
| ☐ | ☐ | அனைத்து வேளைகளிலும், ஜன்னல்களுக்கு அருகில் குழந்தைகள் இருக்கும் போது அவர்களைக் கவனித்துக்கொள்ள அருகில் யாரும் இருக்கிறார்களா? |
| ☐ | ☐ | ஜன்னல்களுக்கு அருகில் போய் விளையாடக் கூடாது என்று குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறீகளா? |
| | | **மாடி முகப்பு மற்றும் கைப்பிடி சுவர் கம்பிகள் குறித்த பாதுகாப்பு** |
| ☐ | ☐ | மாடி முகப்பை யாரும் பாவிக்காத போது கதவுகளும் ஜன்னல்களும் பூட்டி வைக்கப்பட்டுள்ளனவா? |
| ☐ | ☐ | மாடி முகப்பைச் சுற்றிப் போடப்பட்டுள்ள தடுப்பு சுவர்க் கம்பிகள் குறைந்தபட்சம் 1 மீட்டர் உயரத்திற்கு இருக்கின்றனவா? |
| ☐ | ☐ | குழந்தைகள் நுழைந்து நழுவி விழாத அளவிற்கு மாடி முகப்பைச் சுற்றிப் போடப்பட்டுள்ள தடுப்புச் சுவர் குறுக்குக் கம்பிகளுக்கு இடையேயுள்ள இடைவெளி 12.5 சென்டி மீட்டருக்கும் அதிகம் இல்லாமல் இருக்கிறதா? |
| ☐ | ☐ | தடுப்புச் சுவரில், குழந்தைகள் மேற்புற கம்பி மீது ஏற உதவும் வகையில் குறுக்கு வாக்கில் அல்லது கிட்டத்தட்ட குறுக்கு வாக்கில் கம்பிகள் ஏதும் இல்லாமல் இருக்கிறதா? |
| ☐ | ☐ | மாடி முகப்பின் ஓரத்தில் இருந்து தட்டுமுட்டு சாமான்கள், பூந்தொட்டிகள் போன்ற குழந்தைகள் ஏறக்கூடிய பொருட்கள் தூரமாகத் தள்ளி வைக்கப்பட்டுள்ளனவா? (மாடி முகப்பின் ஓரத்திற்கு குழந்தைகள் இழுத்துச் செல்வதற்கு ஏதுவான இலேசான சாமான்கள் ஏதும் அருகில் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்) |
| ☐ | ☐ | கைப்பிடிச் சுவர்க் கம்பிகள் வலுவாகவும், ஸ்திரமாகவும் உள்ளனவா என்று உறுதி செய்தீர்களா? |
| ☐ | ☐ | அனைத்து வேளைகளிலும், மாடி முகப்பில் குழந்தைகள் இருக்கும் போது அவர்களைக் கவனித்துக் கொள்ள அருகில் யாரும் இருக்கிறார்களா? |

**மேலே உள்ள கேள்விகள் எதற்காவது "இல்லை" என்று நீங்கள் பதிலளித்திருந்தால், உங்கள் குழந்தை ஜன்னல் மற்றும் மாடி முகப்பிலிருந்து தவறி விழும் அபாயத்தில் இருக்கக்கூடும் என்று பொருள்.**

NSW

மேலதிகத் தகவல்கள் மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்களுக்கு **www.health.nsw.gov.au/childsafety** எனும் வலைத்தளம் செல்க.

the children's hospital at Westmead

November 2012 © NSW Health SHPN Language (CPH) 120337